முருகப்பெருமான் துணை

**மகான் இடங்கழி நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.02.2023, வெள்ளிக்கிழமை

1. தருமவழி காட்டும் அரங்கனே
தவபலம் கொண்ட தேசிகனே
கருமவினை போக்கி அருளிட
கந்தமகா சக்தியாக வந்த ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் சுபகிருது கலைதிங்கள்
இனிமைபட இருபான் திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 20 ம் நாள் 03.02.2023, வெள்ளிக்கிழமை)
இயம்பிடுவேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை இடங்கழி நாயனாரும்
அருளுவேன் உலக நலம்பெற
பேசிட அன்னதானம் எனும்
பெருங்கருணை கொண்டு அரங்கமகான்
4. மகான் நடத்தும் சேவைதனை
மண்ணுலகோர் ஏற்று வருக
வகைபட வளர்ச்சி நிலையாக
வையகம் தருமபலத்தால் மாறும்
5. மாறும் தயவுமிக்க பூமியாக
மாறும் சேவை நிறைந்த
ஆறுமுகனார் ஆசி பெற்ற
ஆற்றல் மிக்க பூமியாக மாறும்
6. மாறுதலை தரும் ஞானி
மகான் அரங்கனே கலியில்
ஆறுமுகன் அவதாரமாக இருக்க
ஆசி ஏற்று அரங்கன் குடிலை
7. குடிலை அனுகி உலகோர் வர
குறைவிலா மாற்றம் பல
நாடியே ஞானவான்களாக
நன்மைபல அடையும் வண்ணம்
8. வண்ணமுடன் வரம்பல கிட்டி
வாழும் காலமே உலகினில்
மன்னவனாக ஏற்றம் கூடி
மகத்துவம் பல அடைவர்
9. அடையவே இந்தப் பேருலகை
ஆபத்தின்றி காக்கும் வண்ணம்
தடையற ஞானப்படைகளை
தவராஜன் எங்கும் நிரப்பி

10. நிரப்பியே எங்கும் தருமமும்
நீதி குன்றா ஆளுமையும்
வரம்பல நிறைந்த மக்களாய்
வையகம் முழுமைபட கண்டு

11. கண்டு ஞான ஆளுமையாக
கருணைமிக்க ஆளுமையாக
தொண்டுநிறைந்த ஞானஆட்சியாக
தேசமெங்கும் நிரம்பி மாறும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—